# கிறிஸ்து பிறப்பு பெருவிழா

## இரவில் திருப்பலி

### திருப்பலி முன்னுரை

இறை இயேசுவில் அன்பார்ந்தவர்களே!

ஒரு குழந்தை நமக்குப் பிறந்துள்ளார்.

ஓர் ஆண்மகவு நமக்குத் தரப்பட்டுள்ளார்.

நம்மைத் தேடி மீட்பர் வந்துள்ளார்.

இருள் சூழ்ந்து பனி பொழியும் இந்த இரவுப் பொழுதினிலே உள்ளத்தில் மகிழ்ச்சியும் முகத்திலே உவகையும் பொங்கிடும் இவ்வேளையில் நம்முடன் இருந்து நம்மை அன்பு செய்ய மனிதராய் அவதரித்த கிறிஸ்துவின் பிறப்புப் பெருவிழா கொண்டாட்டத்தில் பங்கேற்க வந்திருக்கும் அன்புள்ளங்கள் அனைவரையும் பெருமகிழ்வுடன் வரவேற்கிறோம்.

நமதாண்டவர் இயேசுவின் பிறப்பு நமக்குக் கூறும் செய்தி பகிர்தலேயாகும். அவர் பிறந்தவுடன் கிடத்தப்பட்டது தீவனத்தொட்டியில். தீவனத்தொட்டி என்பது கால்நடைகளுக்கு தீனி போடும் இடம். ஆண்டவர் இயேசுகிறிஸ்து உலகின் உணவாக வந்தார் என்பதை இது உணர்த்துகிறது. நம்மிடம் இருப்பதை இல்லாத எளியவர்களோடு பகிர்ந்து வாழ்வோம். இம்மானுவேலாய் நம் நடுவில் பிறந்த இறைவன் இதுவரை நம்மைப் பாதுகாத்தது போல் இனியும் பாதுகாப்பார் என்பதையும் உணர்வோம்.

டிசம்பர் 25 மட்டும் கிறிஸ்து பிறப்பு நாள் அன்று. ஏழை எளியவர்களுக்கு நாம் இரங்கும் வேளைகளில் எல்லாம் பிறப்பெடுக்கின்றார் நமக்காக ஏழையான நம் இறைவன்.

இந்த பனியும் அழகுதான்

அழகிய பாலகன் பிறந்ததால்

இந்த இரவும் அழகுதான்

அன்னைமரி மடியில் தவழ்ந்ததால்

வானதூதர் பேரணி, “உன்னதத்தில் கடவுளுக்கு மாட்சி உரித்தாகுக! உலகில் அவருக்கு உகந்தோருக்கு அமைதி உண்டாகுக!” என்று வாழ்த்தினர்.

வரலாற்றையே முன், பின் எனப் பிரித்து பல மாற்றங்களைக் கொணர்ந்த பாலன் அனைவருக்கும் அமைதியைத் தர வேண்டும் என்று வாழ்த்துவோம். பிறர் வாழ நாமும் வாழ்வோம், பிறர் மகிழ நாமும் மகிழ்வோம். இதுவே நம் ஆண்டவரின் விருப்பம்.

பிறப்பின் சிறப்பை இயேசு அறிந்திருந்தார். "பணிவிடை பெற அன்று, பணிவிடை புரியவே வந்தேன்" என்றார். இன்று நாம் நவீனத்துவம், நாகரீகம் என்று பலவிதங்களில் அடிமைப்பட்டு இருக்கின்றோம். அழிவின் சக்திகளுக்குள் அகப்பட்டுக் கிடக்கும் மனித இனம் மனம் மாற வேண்டும் என்பதே இயேசுவின் இலட்சியம். இயேசுவை நேசிக்கும் நாமும் இயேசுவின் இலட்சியத்தை மக்கள் மனதில் விதைப்போம். மனுக்குல மனமாற்றத்திற்காக இப்பலியில் இணைந்து செபிப்போம் .

## முதல் வாசக முன்னுரை: (எசாயா 9: 2-4,6-7)

இன்றைய முதல் வாசகத்தில் இஸ்ரயேல் மக்களின் வாழ்வில் மாற்றங்கள் காண வாழ்வளிக்கும் வள்ளலாம் இறைவன் தரும் எல்லா நலன்களையும் இறைவாக்கினர் எசாயா எடுத்துரைக்கின்றார். பேரொளியைக் காணச் செய்து மகிழ்ச்சியுறச் செய்தார். மக்களை ஆட்சி செய்ய வியத்தகு ஆலோசகர், அமைதியின் அரசரைக் கொடுத்துத் தன் மக்களுக்கு நிலையான நீதியோடும் நேர்மையோடும் கூடிய ஆட்சியை உறுதிப்படுத்தினார் என்று மகிழ்ந்து கூறும் இவ்வாசகத்திற்குக் கவனமுடன் செவிசாய்ப்போம்.

## இரண்டாம் வாசக முன்னுரை: (தீத்து 2: 11-14)

நம் மீட்பராகிய கடவுளின் அருள் நம்மீது பொழியப்பட்டுள்ளது. இவ்வருளை வளப்படுத்த நாம் தீமையைக் களைய வேண்டும் ஏனெனில் இயேசுவின் மாட்சி வெளிப்படப் போகிறது. எனவே நாம் நம்மையே தூய்மையாக்க வேண்டும் என அறிவுறுத்தும் இரண்டாம் வாசகத்தைக் கவனமுடன் கேட்போம்.

## இறைமக்களின் மன்றாட்டுகள்:

***பதில்: எல்லாம் வல்ல இறைவா, எங்கள் மன்றாட்டைக் கேட்டருளும்.***

1. எங்களுக்காக மனுவுரு எடுத்த எம் இறைவா!

திருஅவையை வழிநடத்தும் திருத்தந்தை, ஆயர்கள், குருக்கள், கன்னியர்கள், பொதுநிலையினர் முன்னெடுக்கும் எல்லாச் சீர்திருத்த நடவடிக்கைகளிலும் அவர்களுக்குத் துணையாய், உடனிருந்து திருஅவையை காலத்திற்கு ஏற்ப வழிநடத்திட அருள்புரிய வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம் .

2. அன்பின் இறைவா!

எம் தாய்த் திருநாட்டை வழிநடத்தும் அரசியல் தலைவர்களை ஆசீர்வதியும். அவர்கள் ஒவ்வொரு நாளும் தங்களுக்குரிய கடமைகளை உணர்ந்து செயல்படவும், பொறுப்புணர்வுடன் மக்களின் வாழ்வாதாரம் செழிப்பதற்குத் தேவையான நல்ல திட்டங்களைச் செயல்படுத்திட ஞானத்தையும் அறிவையும் தந்து வழிநடத்திட வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

3. எல்லாம் வல்லவரே எம் இறைவா!

நீர் எமக்குக் கொடுத்துள்ள எல்லா வளங்களுக்காகவும் உமக்கு நன்றி கூறுகிறோம். இம்மகிழ்வின் காலத்தில் நீர் எங்களுக்குத் தந்த வளங்களை விரயமாக்காது, தேவையற்ற ஆடம்பரப் பொருள்களுக்கு செலவிடாது பொறுப்புணர்வோடு வளங்களை பயன்படுத்துவதற்கும் ஏழைகளோடு பகிர்ந்து வாழ்வதற்கும் வேண்டிய நல்ல உள்ளத்தை எமக்குத் தந்திட வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்

4. அன்புத் தந்தையே இறைவா!

நீர் எங்களுக்குக் கொடுத்துள்ள குழந்தைச் செல்வங்களுக்காக உமக்கு நன்றி கூறுகிறோம். இவர்கள் உம்மையே தேடி நேசித்திடவும், உமது வார்த்தைக்கு ஆர்வத்துடன் செவிமடுத்து வாழவும், தங்கள் கவனத்தை செலுத்திடவும், எமது பிள்ளைகள் இறையுறவிலும் ஒழுக்கத்திலும் ஞானத்திலும் கல்வியிலும் சிறந்து விளங்கி உமக்குகந்த பிள்ளைகளாக வாழவும் செயல்படவும் தேவையான வரமருள வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

5. எல்லா மக்களுக்கும் பெரும் மகிழ்ச்சியூட்டும் இறைவா!

இன்றைய பெருவிழாத் திருப்பலியில் கலந்து கொள்ள முடியாமல் நோயுற்றிருப்போர், பயணம் செய்வோர், பணியில் இருப்போர், பிற நிலைகளில் இருப்போர் அனைவரும் இன்றைய நாளின் மகிழ்வையும், ஆசீரையும் பெற்று மகிழச் செய்தருள வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்

**நன்றி: ஆசிரியை திருமதி. ஞா. சொஸ்தினா மேரி, மேலமெஞ்ஞானபுரம்.**

**“கடவுள் அன்பாய் இருக்கிறார்!” 1 யோவா 04: 16**

மறைத்திரு. அமிர்தராச சுந்தர் ஜா.

info.arulvakku@gmail.com; + 91 944 314 0660; www.arulvakku.com